மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த அடிப்படையிலேதான் இதுபோன்ற திட்டங்கள் ஆராயப்படுகின்றன.

திரு. ஏ. எம். இராஜா : காலிங்கராயன் கால்வாயில் ரூ. 60 லட்சம் செலவில் காரை பூசும் திட்டம் ஆராய்ச்சியில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எப்பொழுது செயலில் வரும்? தடப்பள்ளி, அரக்கன் கோட்டை கால்வாய்களுக்கு காரை பூசும் திட்டம் பற்றி செயற் குறிப்பு இருக்கிறதா? அது எப்பொழுது செயல்படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காலிங்கராயன் கால்வாயைப் புதுப்பிப்பதற்கான திட்டம் பற்றி தலைமைப் பொறியாளர் ஆலோசனை சொல்லி யிருக்கிறார்கள். வருவாய்த் துறையை கலந்து ஆலோசித்த பிறகு, இது பற்றி ஒரு முடிவு செய்யப்படும். மற்ற இரண்டு கால்வாய்கள் பற்றி, அரக்கன் கோட்டை, தடப்பள்ளி பற்றி தலைமைப் பொறியாளர் அறிக்கை அனுப்பும் படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : மழையினாலும், வெள்ளத்தாலும் பல கால்வாய்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஒவ்வொரு மாவட்டத்திலும் இதைப்போன்று சிமெண்டு பூசி கால்வாய்களைப் புதுப்பிக் கின்ற திட்டத்தை அரசு ஏதேனும் புதியதாகத் துவக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆங்காங்கு இருக்கின்ற திட்டங்களை அனுசரித்து இதைப்போன்று பல கால்வாய்களில் இப்படிப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாவட்ட வாரியாக இதைப்பற்றிப் பரிசீ லிக்கலாம்.

அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம்

* 292. வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) இராசபுரம்-அரவக்குறிச்சிக்கிடையில் அமராவதி ஆற்றின் மீது பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) செயற்குறிப்பு பரி சீலனையில் உள்ளது.

(இ) அரசு ஒப்புதல் அளித்தபின் வேலை துவங்கும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: 1½ ஆண்டுகளுக்கு முன்பாக அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்திருந்தபொழுது மக்களுக்கு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி தந்தார்கள். இவ்வளவு காலத்திற்குப் பிறகாவது உடனடியாக இந்த நிதி ஆண்டிலேயே இந்தத் திட்டத்தை எடுத்து, இந்தச் சிறிய பாலத்தைக் கட்டித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் மீது பேசும்பொழுது தான் தொகுதிக்குப் போகாமல் ஒளிந்துகொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அவர்களைக் காப்பாற்றுவதற்கு இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

(திரு. வா. மை. அப்துல் ஜப்பார் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காப்பாற்றி விட்டார்களே! இன்னும் என்ன?

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: துணைத்தலைவரவர்களே, எனக்கும் என்னுடைய தொகுதி மக்களுக்கும் உதவி செய்கின்ற வகையில் அரசு அந்தத் திட்டத்தை ஏற்றுள்ளதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, வேலையை உடனடியாகத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வேலைத் தொடங்குவதற்குரிய எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: இப்படிப் பல திட்டங்கள் நிறைவேற்றப் படாமல் இருப்பதால், சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய தொகுதிக்குப் போகமுடியாமல் இருந்தால், அத்தகையத் திட்டங்களை எல்லாம் அரசாங்கம் உடனடியாக பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எல்லோரும் தொகுதிக்குப் போகவேண்டுமென்றுதான் நாங்கள் விரும்புகிறோம்.

குடதலையாற்றின் குறுக்கே பாலம்

* 293. வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், தாமரைப்பாக்கம் அணைக்கட்டருகில் குடதலையாற்றின் மீது அமைக்கப்படும் மேல்நிலைப் பாலத்திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது?